# Sub Court, Eraniel

**O.S. No.64/2023**

**Date:** 06.12.2024.

வா.சா.1 - திருமதி. செல்ல நாடாச்சி.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தற்போது என்னிடம் காட்டப்படுவது நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த பிராதின் நகல் என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படுவது, நான் இரணியல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் 31.08.2022 ம் தேதி அன்று நடந்த விசாரணை அறிக்கை என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (5 பக்கங்கள் கொண்டது) தற்போது என்னிடம் காட்டப்படுவது நான் பத்மநாபபுரம் சார் ஆட்சியரிடம் கொடுத்த மனு, வாக்குமூலம் மற்றும்த விசாரணை அறிக்கை என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (5 பக்கங்கள் கொண்டது) தற்போது என்னிடம் காட்டப்படுவது எனது மாமியார், கணவரின் தாயார் பாக்கியம் நாடாச்சி, எனக்கு எழுதிக் கொடுத்த தானப்பத்திரத்தின் இணையதளநகல், என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ.5 அக குறியீடு செய்யப்படுகிறது. நான் எனது மகன் மணிகண்டனுக்கு 03.11.2011 அன்று எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் இணையதள நகல் என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ.6. எனது மகன் செல்வினுக்கு 03.11.2011 அன்று எழுதிக் கொடுத்த ட்டில்மெண்ட் ஆவணத்தின் இணையதள நகல் என்றால், சரிதான். அது பி.வா.சா.ஆ.7. 28.08.2022 வரை எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. 15.07.2020 தேதிக்கு பிறகு, 28.08.2022 ல் தான் முதன் முதலாக நான் போலிசில் புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். அதாவது 1ம் பிரதிவாதிக்கு 2 வது திருமணம் நடைபெற்ற பிறகு என்றால், சரிதான். நான் 15.07.2020 அன்று என்னை ஏமாற்றி 1ம் பிரதிவாதி எழுதி வாங்கிக் கொண்டதாகச் சொல்லும் விடுதலைப் பத்திரத்தை குறித்து மாவட்ட பதிவாளரிடமோ, காவல் துறையிலோ புகார் ஏதும் கொடுக்கவில்லை. நான் குடிவசிக்கும் 27/151ஏ வீட்டினை கட்டியது இறந்து போன எனது மகன் மணிகண்டன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4ம் பக்கத்தில், முதல் பத்தியில் எனது பாகமான 1/3 உரிமையை விட்டுக் கொடுத்தால் தெருவில் நிற்க வேண்டும் என்பதால் அந்த வீட்டை ஒரு போதும் எழுதிக் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். திருமழிசையில் உள்ள 1000

சதுர அடி நிலத்தை 1ம் பிரதிவாதி விற்பனை செய்யப் போவதாக என்னிடம் தகவல் சொன்னது என்ற பெயர் சொல்ல முடியாது. இந்த வழக்கில் குறிப்பிடும் 3 அயிட்டச் சொத்துக்களுக்கும் என் பெயரில் 2020 க்குப் பிறகு பட்டா மற்றும் தீர்வை இல்லை என்றால், சரிதான். என்னை ஏமாற்றி 1ம் பிரதிவாதி 15.07.2020 ல் விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கி விட்டதாக நான் வழக்கிற்காக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கி, திங்கள் நகர் கிளையில் வங்கிக் கணக்கு உண்டு. மணிகண்டன் இறந்த பிறகு ரூ.96,000/- எல்.ஐ.சி. பணம் என்னிடம் கொடுத்தார்கள். எல்.ஐ.சி பணம் ரூ.98,000/- என்னுடைய இந்தியன் வங்கிக் கிளைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்றால், சரியல்ல. என்னுடைய மேற்படி 2 வங்கிக் கணக்கு புத்தகங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். 1ம் பிரதிவாதி திருமணம் செய்துள்ள ஆர். சசி என்பவருடன், அவரை இணைத்து, 1ம் பிரதிவாதியை பற்றி தவறாக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் 1ம் பிரதிவாதிக்கு மனவருத்தத்தை ஏற்படுத்துவதற்காக நான் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. நான் உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தான் முத்திரைத்தாள் வாங்கி பத்திரப்பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்து, பத்திர எழுத்தர் ராஜேஸ்வரியை ஏற்பாடு செய்து, விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால், சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தையும் மறைத்து தற்போதும் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. விடுதலைப் பத்திரத்திரத்திற்காக ரூ.6,00,000/-, பத்திரச் செலவுக்காக ரூ.1,00,000/- நான் பெற்றுக் கொண்டேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.